**அ.வ.எண்.52/2020**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **25.02.2026** |
| **பெயர்** | **சிந்துஜா** |
| **த/பெ** | **சக்திவேல்** |
| **சாட்சி** | **PW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 04.29.p.m**

**குறுக்கு விசாரணை–**

1. நான் இவ்வழக்கில் பிற வாதிகளுக்காக சாட்சி கூற வந்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு எந்த வருடம் திருமணம் ஆனது என்றால் 2012. என் கணவர் பெயர் சக்திவேல். என் கணவரை பெயரை எனது பிராதிலும் , எனது பிரமாணவாக்குமூலத்திலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எஸ. மணி என்பவர் 1982–ல் இந்திராணி (பிரதிவாதி–6) என்பவரை திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான். அவர்களுக்கு 2 பிள்ளைகள் (பிரதிவாதிகள் 7 மற்றும் 8) என்றால் சரிதான்.

2. இந்த வழக்கின் விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியுமா அல்லது என் தாயார் கூறி தெரியுமா என்றால் என் தந்தை கூறி தெரியும். இந்த வழக்கில் பிரதிவாதிகள் 6 முதல் 8 வரையிலானவர்கள் தாக்கல் செய்த பதிலுரையை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 1 என்ன ஆவணம் என்றால் என்னுடைய பிறப்பு சான்றிதழ். மேற்சொன்ன வா.சா.ஆ 1 முறையான முத்திரை இல்லை என்றும் அதனால் அது செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ 2 என் தங்கையின் பிறப்பு சான்றாக குறிப்பிட்டுள்ளேன் ஆனால் அதுவும் உண்மையல்ல என்றால் சரியல்ல.

3. வா.சா.ஆ 2 மற்றும் வா.சா.ஆ 3 இரண்டிலும் எந்த பெயரும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 6 முதல் 8 பிரதிவாதிகளிடம் இருந்து

பணத்தை பரிக்கும் எண்ணத்தோடும் அவர்களுக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையிலும் அவர்களின் நடத்தையில் சந்தேகிக்கும் வகையிலும் பொய்யான சங்கதிகளை வைத்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மணி என்பவர் என் தாயார் நவநீதம்மாளை திருமணம் செய்து கொண்டதாக பொய்யான சங்கதிகளை வைத்து நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிக்கும் வகையில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4. மணிக்கும், இந்துராணிக்கும் ஏற்பட்ட திருமணம் கசப்புகள் காரணமாக மணி, இந்துராணியின் மீது cruelty, desertion என்ற அடிப்படையில் HMOP No. 4442/2011 தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். மணி எப்போது இறந்தார் என்றால் 26.02.2019–ல் இறந்துவிட்டார். 5–ஆவது கூடுதல் குடும்ப நல நீதிமன்றம், சென்னை மேற்சொன்ன வழக்கை 25.04.2019 ல் அவர் இறந்துவிட்ட காரணத்தினால் அந்த வழக்கை தள்ளுபடி செய்துவிட்டது என்றால் சரியல்ல, 2020–ல் தள்ளுபடி ஆனது.

5. என்னிடம் காண்பிக்கப்படும் உத்தரவுதான் மேலே சொன்ன தள்ளுபடி ஆன உத்தரவு என்றும் அதில் என்ன தேதி குறிப்பிட்டுள்ளது என்றால் 25.04.2019. **சாட்சி ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் அந்த ஆவணமானது பி.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான் மணியின் இறப்பு சான்றிதழ் என்றால் சரிதான். **சாட்சி ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் அந்த ஆவணமானது பி.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான் 01.03.2019–ல் பொன்னேரி கோட்டாச்சியர் அவர்கள் உத்தரவு என்றால் சரிதான். **சாட்சி ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் அந்த ஆவணமானது பி.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான் மணியின் burial ground report என்றால் சரிதான். **சாட்சி ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் அந்த ஆவணமானது பி.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வா.சா.ஆ 4 ஆவணம் மேற்சொன்ன HMOP யில் தாக்கல் செய்த இடைக்கால மனு என்றும் HMOP தள்ளுபடி ஆன பிறகு நான் தாக்கல் செய்த இடைக்கால மனு வழக்கிற்கு தேவையற்றது என்றால் சரியல்ல. மணி இறந்தபிறகு இந்துராணியிடம் மணியின் சடலத்தை கொடுப்பதற்கு நானும் எனது தாயாரும் ஆட்சேபித்தோம் என்றால் சரிதான். வா.சா.ஆ 5 மேற்சொன்ன

சங்கதியின் அடிப்படையில் மணியின் சடலத்தை எங்களிடம் ஒப்படைக்க மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றத்திடம் நான் தாக்கல் செய்த நீதிப்பேராணை மனுவின் உத்தரவு என்றால் சரிதான். என் தங்கை தான் அந்த மனுவை தாக்கல் செய்தார். அந்த உத்தரவில் ஆர்.டி.ஒ உத்தரவின் படி மணியின் சடலத்தை 01.03.2019 தேதிக்குள் ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவானது என்றால் சரிதான்.

7. ஆர்.டி.ஒ உத்தரவின் படி 6–ம் பிரதிவாதியான மணியின் மனைவியான இந்துராணியிடம் தான் சடலத்தை ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவானது என்றால் சரிதான். ஆர்.டி.ஒ உத்தரவை எதிர்த்த மேல்முறையீடு செய்தோமா என்றால் செய்தோம். அது தான் வா.சா.ஆ 6 என்றால் சரிதான். இந்த வா.சா.ஆ 6–ன்படி தகுந்த உரிமையியல் நீதிமன்றத்தை நாடவேண்டும் என்று உத்தரவானது என்றால் சரிதான். சட்டத்திற்கு புறம்பான பரிகாரத்தை வாங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு வா.சா.ஆ 7 முதல் வா.சா.ஆ 9 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதே போல் நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 11 குடும்ப அட்டை இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.

8. வா.சா.ஆ 12 முதல் வா.சா.ஆ 15 வரையிலான ஆவணங்கள் மேற்சொன்ன HMOP யில் தாக்கல் செய்த ஆவணங்கள் என்றும் HMOP தள்ளுபடி ஆன பிறகு நான் தாக்கல் செய்த மேற்சொன்ன ஆவணங்கள் வழக்கிற்கு தேவையற்றது என்றால் சரியல்ல. மணிக்கும் அவரின் மனைவி இந்துராணிக்கும் இடையே ஏற்பட்ட சம்பவங்களை குறித்து நான் சாட்சியம் அளிக்க எனக்கு எந்த முகாந்தரமும் இல்லை என்றும் நான் அவர்களுக்கிடைய 3ம் தரப்பினர் என்றால் சரியல்ல. மணியின் மனைவியான இந்துராணி அவருக்கு எதிராக MC No. 11/2002 தாக்கல் செய்து 5–ஆவது கூடுதல் குடும்ப நல நீதிமன்றம், சென்னை தாக்கல் செய்து அதன் மூலம் ஜீவனாம்சம் அவருக்கும் அவரின் பிள்ளைகளுக்கும் சேர்த்து பெற்று வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

9. மணி என்பவர் port trust –ல் வேலை செய்தார் என்றால் சரிதான். அந்த வேலையில் இருந்து மணிக்கு வந்தடையும் terminal benefits மற்றும் retirement benefits –ஐ அவரின் மனைவி இந்துராணிக்கு கிடைக்க கூடாது என்ற எண்ணத்தோடு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்துராணியின் பிள்ளைகளின் நடத்தையை தரைகுறைவாக

கூறி இந்த வழக்கில் குறிப்பிடுவதற்கு வாதிகளுக்கு எந்த அருகதையும் இல்லை என்றால் சரியல்ல. மணிக்கும் அவரின் மனைவியான இந்துராணிக்கும், அவரின் பிள்ளைகளுக்கும் முறையான அனைத்து அரசாங்க ஆவணங்களும் உள்ளது என்றால் சரியல்ல. மணிக்கு உண்மையான வாரிசுதார்கள் 6 முதல் 8 பிரதிவாதிகள் என்றால் சரியல்ல. மணிக்கு நாங்கள் தான் உண்மையான வாரிசுகள் என்பதை காண்பிக்க போதுமான ஆவணங்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கை 6 முதல் 8 பிரதிவாதிகளுக்கு வந்தைடையும் terminal benefits மற்றும் retirement benefits –ஐ தடுக்கும கெட்ட எண்ணத்தோடு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதி கோரி பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றும் இந்த வழக்கு செலவுத்தொகையோடு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 05.08.p.m.**